TNTP120000762011

Presented on : 15-12-2011
Registered on : 15-12-2011
Decided on : 24-07-2026
Duration : 14 years, 7 months, 9 days

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்
முன்னிலை. திரு தி.அன்பு, பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி
2026 ம் ஆண்டு ஜுலை திங்கள் 24 ம் நாள் வெள்ளிக் கிழமை

**அசல் வழக்கு எண்.253/2011**

தங்கராசு .. வாதி

/எதிர்/

1. காளங்கியம்மாள்
2.பெரியண்ணன் ( இறந்துவிட்டார்)**
3. பெருமாள்
4. ஜெயக்கொடி( இறந்துவிட்டார்)*
5. ரெங்கநாதன்
6. விஜயலட்சுமி
7. லோகாம்பாள்

* Amendment asper order in I.A. 2/2023,, dated 24.08.2023.

**Amendment asper order in Memo, dated 22.06.2026.

.. பிரதிவாதிகள்

இவ்வழக்கானது, என்முன்பாக 22.07.2026 ம் தேதியில் இறுதி விசாரணைக்காக வந்தபோது வாதிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு வி.ராமமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகளுக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு யு.சபாபதி அவர்கள் ஆஜராகியும், பி.வா.சா.1 ஐ வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அழைத்தும் ஆஜராகதால் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், வாதி தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

T Anbu

Digitally signed by T Anbu
Date: 2026.07.24 18:41:05 +0530

**தீர்ப்புரை**

வாதி தனக்கு பாத்தியப்பட்ட தாவா நிலங்களுக்கு தாவா பொது கிணறான சர்வே எண்.293/3 சி–லிருந்து சர்வே எண்.293/1 பி நிலத்தில் பூமிக்கடியில் புதைக்கப்பட்டுள்ள குழாய் மூலமாக தண்ணீர் எடுத்து சென்று பாசனம் செய்து கொண்டு வருவதை பிரதிவாதிகளோ அவர்களது ஆட்களோ, எவ்வகையிலும் இடையூறு செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக்கோரியும்,

வாதி தனக்கு பாத்தியப்பட்ட தாவா நிலங்களிலிருந்து வழக்கு வரைபடத்தில் கண்ட எ,பி புள்ளிகளில் உள்ள மேட்டு நிலத்திலுள்ள 4 அடி வரப்பு வழியாக பொதுக்கிணறை சென்றடைந்து வருவதை பிரதிவாதிகளோ அவர்களது ஆட்களோ எவ்வகையிலும் இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக்கோரியும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்**

தாவா சொத்துக்கள் துறையூர் வட்டம், வடக்குவெளி கிராமத்தில் உள்ளன. இவ்வழக்கு சர்வே 293/3–ல் உள்ள உபயவாதிகளுக்கும் மற்றும் வாதியின் சகோதரர் ஆனந்தனுக்கும் பாத்தியப்பட்ட பொதுவான கிணற்றிலிருந்து பூமிக்கடியில் குழாய் பதித்து தண்ணீர் செல்லும் பாசன பாத்தியத்தைப் பொருத்தும், மேற்படி பொதுக் கிணற்றுக்கு செல்லும் தடநடைப்பாதையைப் பொருத்தும் ஆகும். தாவா கிராம சர்வே 294/2–ல் ஏக்கர் 8.99 செண்டில் தகுந்த நான்கெல்லைகள் காட்டி வாதி ஏக்கர் 1.72 செண்ட் நிலத்தை 14.04.1988–ம் தேதி 1 முதல் 3 எதிர்வாதிகளிடம் கிரையம் பெற்றுள்ளார். கடந்த 08.01.1992 தேதி வாதியின் சகோதரர் ஆனந்தன் என்பவர் தாசபோயன் வகையறாவிடம் சர்வே 293/1–ல் ஏக்கர் 2.72 செண்டில் தகுந்த நான்கெல்லைகள் காட்டி ஏக்கர் 1.36 செண்டும், சர்வே எண்.294/2 ல் ஏக்கர் 8.99 செண்டில் ஏக்கர் 0.17 செண்ட் நிலத்தினையும் கிரையம் பெற்றுள்ளார். ஆனந்தனுக்கு தாசபோயன் கிரையம் செய்தது போக எஞ்சிய சொத்து ஏக்கர் 1.36 செண்ட் மட்டுமே இருக்க, மேற்படி சர்வே நெம்பரில் 1 முதல் 3 பிரதிவாதிகள் ஏக்கர் 1.52 செண்ட் என தவறான பரப்பளவு காட்டி கிரையம் பெற்றுக் கொண்டு அதனை அனுசரித்து சர்வே 293/1A மற்றும் 293/1B என உட்பிரிவுகள் ஏற்பட்டுவிட்டன.

T Anbu

Digitally signed by T Anbu
Date: 2026.07.24 18:41:14 +0530

**3.** கடந்த 15.10.2009–ம் தேதி வாதியும், வாதியின் சகோதரரும். 1ம் எதிர்வாதியும் சர்வே எண். 293/3A, 3B, 3C இவைகளைப் பொருத்து பரிவர்த்தனைப் பத்திரம் செய்து கொண்டதில் சர்வே 293/3C–ல் பொதுக்கிணறு மற்றும் கிணற்று மேட்டுக்கு ஏக்கர் 0.11 செண்ட் ஒதுக்கி அதற்கு வடபுறமுள்ள ஏக்கர் 0.30 செண்டில் அதாவது சர்வே 293/3A மற்றும் 293/3B–ல் கீழ்புறம் 0.15 செண்ட் வாதிக்கும். அவரது சகோதரருக்கும் அவைகளில் மேல்புறம் 0.15 செண்ட், 1ம் எதிர்வாதியின் குடும்பத்திற்கும் பரிவர்த்தனை ஆகியது.

4. 1 முதல் 3 எதிர்வாதிகள் குடும்பத்தில் பிரிவினை ஏற்பட்டதற்குப் பிறகு, வாதியும் அவரது சகோதரரும் 12.04.2010–ம் தேதி தங்களுக்குள் ஏற்பட்ட வாய்கரார் பிரிவினையை அனுசரித்து ஆனந்தனுக்கு வாதி ஒரு கிரையப் பத்திரமும், வாதிக்கு ஆனந்தன் ஒரு கிரையப் பத்திரமும், 12.04.2010–ம் தேதி எழுதிக்கொண்டனர். அவ்வாறு ஆனந்தன் வாதிக்கு கிரையப் பத்திரம் எழுதிக் கொடுக்கும் பொழுது சர்வே 293/1–ல் ஏற்கனவே 1 முதல் 3 எதிர்வாதிகள் கிரையப் பத்திரம் எழுதிக்கொள்ளும் பொழுது சர்வே 293/1–ல் ஏக்கர் 2.72 செண்டில் ஏக்கர் 1.36 செண்ட் என கிரையம் பெறுவதற்கு பதிலாக ஏக்கர் 1.51 செண்ட் என கிரையப் பத்திரத்தை ஏற்படுத்திக் கொண்டு அதனை அனுசரித்து, 293/IB என உட்பிரிவு ஏற்பட்டுவிட்டதால், சர்வே 293/IB–ல் மேல்புறம் ஏக்கர் 0.05 செண்ட் நிலத்தினையும் வாதிக்கு கிரையம் செய்வதாக வேறு சொத்துக்களையும் சேர்த்து ஆனந்தனும், பெரியண்ணனும் சேர்ந்து வாதிக்கு கிரையப் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளனர்.

5. எனவே வாதிக்கும், அவரது சகோதரருக்கும் பிரிவினை ஏற்பட்டதற்குப் பிறகு, வாதிக்கு சர்வே 294/2B–ல் மேல்புறம் ஏக்கர் 0.08 1/2 செண்டும், சர்வே 294/1A–ல் கீழ்புறம் ஏக்கர் 0.66 1/2 செண்ட் நிலமும், சர்வே 293/1B–ல் மேல்புறம் ஏக்கர் 0.05 செண்ட் நிலமும் மற்றும் சர்வே 294/2C–ல் வாதி கிரையம் பெற்ற ஏக்கர் 1.72 செண்டில் ஆனந்தனுக்கும், பொதுப்பாதைக்கும் ஒதுக்கியது போக 0.6 3/4 செண்டும் சர்வே 293/3A–ல் கீழ்புறம் பாதியும், சர்வே 293/3C பொதுக்கிணற்றில் 4 பங்கும் பாத்தியப்பட்டுவிட்டது. இதேபோல வாதியின் தம்பி ஆனந்தனுக்கு சர்வே 293/3C பொதுக்கிணற்றில் 4 பங்கும் 293/3B–ல், கீழ்புறம் பாதியும் சர்வே 293/1A–ல், மேல்புறம் ஏக்கர் 0.69 –32 செண்டும், சர்வே 294/2C–ல் மேல்புறம் 1.72

T Anbu
Digitally signed by T Anbu
Date: 2026.07.24 18:41:24 +0530

செண்டில் கீழ்புறம் தென்வடல் மற்றும் கிழமேல் வண்டிப்பாதைக்கு வாதியும், ஆனந்தனும் நிலம் ஒதுக்கிக் கொண்டது போக எஞ்சிய 0.89 3/4 நிலமும், சர்வே 294/2B –ல் கீழ்புறம் ஏக்கர் 0.08.1/2 செண்டும் பாத்தியப்பட்டுவிட்டன.

6. தாவா 293/3C பொதுக்கிணற்றில் பாதி பாகமும், சர்வே 293/3A, 3B இவைகளில் மேல்புறம் பாதியும், சர்வே 293/1B–ல் கீழ்புறம் ஏக்கர் 1.46 செண்ட் நிலமும், சர்வே 294/2c–ல் ஆனந்தன் சொத்திற்கு கீழ்புறம் பகுதி நிலங்களும், சர்வே எண்.293/2 ல் உள்ள நிலமும் 1 முதல் 3 எதிர்வாதிகள் குடும்பத்திற்குப் பாத்தியப்பட்டது. இந்த நிலங்களுக்கு பாசன ஆதாரமுள்ள கிணறு சர்வே எண். 293/3C–ல் உள்ள கிணறாகும். இந்த கிணற்றிலிருந்து வாதி மற்றும் அவரது சகோதர் ஆனந்தன் நிலங்களுக்கு சர்வே எண்.293/1B ல் சுமார் 20 வருடங்களுக்கு முன்பு, பதிக்கப்பட்ட PVC குழாய் மூலம் தண்ணீர் பாசனம் நடைபெறுகின்றது. பொது கிணற்றில் ஏற்கனவே இருந்த ஒரு பொது மின் இணைப்பு இருக்க மற்றும் ஒரு இணைப்பு பெறப்பட்டு, தற்போது பொது கிணற்றில் இரண்டு மின் இணைப்புகளும், இரண்டு மின் மோட்டார்களும் உள்ளன. இரண்டு மின் இணைப்புகளில் தற்போது மின் இணைப்பு எண்.14 வாதிக்கும். அவரது சகோதரருக்குப் பாத்தியப்பட்டது. 1 முதல் 3 எதிர்வாதிகள் மின் இணைப்பு எண்.101 ஆகும். இதை தவிர்த்து பொதுக்கிணற்றிலிருந்து வாதியின் நிலங்களுக்கு தண்ணீர் பாசனம் செய்ய வேறு பாசன வசதி ஏதும் கிடையாது.

7. வாதியும், வாதியின் சகோதரர்களும் தங்களது நிலங்களிலிருந்து சர்வே 293/1A மற்றும் IB–க்கு தென்புறமுள்ள வழக்கு வரைபடத்தில் கண்ட A, B அடையாளமிட்ட 4 அடி அகலமுள்ள வரப்பின் மூலமாக பொதுக்கிணற்றை சென்றடைந்து வருகின்றனர். இதனை தவிர்த்து வாதியும், வாதியின் சகோதரரும் தங்களது வீடு மற்றும் நிலங்களிலிருந்து பொதுக்கிணறை அடைய வேறு பாதை வசதி ஏதும் கிடையாது. சர்வே 293/3C ல் உள்ள கிணறு பொதுக்கிணறு என்பதாலும், மேற்படி பொதுக்கிணறுக்கு சம்மந்தப்பட்ட ஆயக்கட்டு நிலங்கள் வாதிக்கும் அவரது சகோதரருக்கும் மற்றும் 1 முதல் 3 எதிர்வாதிகளுக்குமிடையே பாத்தியம் ஏற்பட்டுவிட்டபடியாலும், வழக்கு வரைபடத்தில் கண்ட A, B வரப்பின் மூலமாகவும் பொதுக் கிணற்றை அடைய தடநடைபாதையாக புழக்கம் செய்ய அத்தியாவசிய புழக்க

T Anbu
Digitally signed by T Anbu
Date: 2026.07.24 18:41:41 +0530

உரிமைப்படிக்கும் இயற்கை விதிநெறி செய்ய முறைகளின் படிக்கும் வாதிக்கும், வாதியின் சகோதரர்களுக்கும் உரிமை உள்ளது. இதனை மறுக்க 1 முதல் 3 எதிர்வாதிகளுக்கு எவ்விதத்திலும் உரிமையில்லை.

8. வாதியின் மேற்படி பழக்க உரிமையை மறுப்பதற்கு 1 முதல் 3 எதிர்வாதிகள் முரண்தடை தோஷத்தாலும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். மேற்படி வரைபடத்தில் கண்ட A, B புள்ளிகளுக்கு வடக்கே உள்ள நிலம் பள்ளமான நிலங்களாகும். A, B புள்ளிகளுக்கு தெற்கே உள்ள நிலம் மேட்டு நிலமாகும். மேட்டு நிலத்திலுள்ள A, B வரப்பின் மூலமாகவே பொதுக்கிணற்றை வாதியும் ஆனந்தனும் சென்றடைய முடியுமே தவிர வேறுவழியில்லை. 4 முதல் 7 எதிர்வாதிகளுக்கு 1 முதல் 3 எதிர்வாதிகள் தங்களது நிலங்களை பாத்தியப்படுத்தியுள்ளதாகக் கூறிக்கொண்டு கடந்த 15.11.2011–ம் தேதி முதல் வாதி பொதுக் கிணற்றிலிருந்து சர்வே 293/1B–ன் பூமிக்கடியில் புதைக்கப்பட்டுள்ள PVC குழாய் மூலம் வாதி தனது நிலங்களை பாசனம் செய்வதை குழாயை சேதப்படுத்தியது மூலமும், வாதி தனது நிலங்களிலிருந்து வழக்கு வரைபடத்தில் கண்ட A,B புள்ளிகளின் வழியாக பொதுக் கிணற்றை அடைந்து வருவதையும் தடுத்துக் கொண்டு வருகின்றனர். கடந்த 15.11.2011–ம் தேதி மேற்படி பாசனக் குழாயை எதிர்வாதிகள் சேதம் விளைவித்ததால் வாதி காவல் நிலையத்தில் புகார் கொடுக்க நேர்ந்தது. காவல் நிலையத்தினர் பூசலுக்கு முன்பு எவ்வாறு தரப்பாளர்கள் அனுபோகம் செய்தார்களோ அவ்வண்ணமே அனுபோகம் செய்ய வேண்டுமென அறுவுறுத்தினர். இருப்பினும் சீர்செய்யப்பட்ட குழாயை மீண்டும் உடைக்கவும், நடைபாதையில் முள்கிளைகளை போடவும் வாதிக்கு இடையூறு கொடுக்கவும், பிரதிவாதிகள் முயன்று வருகின்றனர். எனவே வாதி இவ்வழக்கினை நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார்.

9. 2<u>ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு, மற்ற பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்.</u>

வாதியின் வழக்கு பொய்யும், புரட்டும், மோசடியுமாகும். வாதியின் வழக்குரையில் பிரதிவாதியின் கணவர் பெயர் பெரியண்ணன் என்பதற்கு பதிலாக பெருமாள் என்று தவறுதலாக குறிப்பிட்டுள்ளது. அதேபோல் 5–ம் பிரதிவாதியின் தகப்பனார் பெயரும் தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த வகையில் இந்த வழக்குரையும், திருத்தம்

T Anbu
Digitally signed by T Anbu
Date: 2026.07.24 18:41:49 +0530

செய்யப்பட வேண்டியதாக உள்ளது. வாதியின் தாவா சொத்து கிணற்றில் இருந்து சர்வே எண்: 293/1B நிலத்தில் பூமிக்கடியில் 20 வருடங்களுக்கு முன்னால் PVC குழாய் மூலம் தண்ணீர் பாசனம் செய்து விவசாயம் செய்து வருவதாக சொல்வது சரியல்ல. மேற்படி குழாய் பிரதிவாதிகளின் மேட்டு பகுதி நிலங்களுக்கு நீர் பாசனம் செய்ய பிரதிவாதிகளின் நிறுவப்பட்ட பைப்லைன் ஆகும். மேற்படி பைப்லைன்கள் பிரதிவாதிகளின் நிலத்தின் மற்ற பகுதிகளிலும் நிறுவப்பட்டுள்ளன.

10. வாதியின் நிலங்களில் இருந்து பொது கிணற்றிக்கு A,B புள்ளிக்களுக்கிடையில் உள்ள 4 அடி அகலமுள்ள வரப்பின் மூலம் வாதி சென்று வருவதாக சொல்வது பெருத்த பொய்யும் மோசயுமாகும். அவ்வாறு 4 அடி அகலத்தில் ஒரு வரப்பு நிலப்பகுயில் (பூஸ்துதியில்) இல்லை. ½ அடி கண்டுள்ள வரப்பு 3 அடி அகலமுள்ள வாய்க்கால் மட்டுமே உள்ளது. மேற்படி வாய்காளின் மைய பகுதியிலும் சுமார் 7,8 தென்னை மரங்கள் நெடுவிலும் வைக்கப்பட்டுள்ளன. உண்மை இவ்வாறிருக்க வாதி 4 அடி அகல பாதை இருப்பதாக சொல்லிருப்பது பெருத்த மோசடியாகும். மேலும், வாதி தனது வரைபடத்தில் பாதை என குறிப்பிட்டிருக்கும் பகுதி ஒரு சமபரப்பான நிலப்பகுதியல்ல. மேடு பள்ளமான பகுதியாகும்.

11. உண்மையில் வாதி அவரது சகோதரரும் தன் நிலங்களுக்கு காலம் காலமாக பொதுக்கிணற்றின் வடபுறம் உள்ள சர்வே எண்: 293/3A,3B ஆகியவற்றின் வழியே வாதி வரைபடத்தில் நீலம், பச்சை வர்ணம் இட்டு காட்டப்பட்டுள்ள பாதை வழியாகதான் வாரியை தாண்டி ரோட்டுக்கு சென்று அனுபவம் செய்துவருகிறார். இப்பால் தான் புதியதாக கட்டியிருக்கும் வீட்டில் இருந்து பிரதிவாதிகளின் நிலத்தின் வழியே குறுக்கே சென்று பொது கிணற்றை சென்றடைந்தால் தனக்கு சௌகரியமாகவும், வசதியாகவும், இருக்குமே என்ற காரணத்தால் பிரதிவாதிகளிடம் அவ்வாறு சொல்லி அனுமதி கேட்டார். அதற்கு பிரதிவாதிகள் தங்கள் நிலத்தில் அமைத்துக்கொள்ள சம்மதிக்காததால் இந்த பொய் தாவாவை போட்டுள்ளார்.

12. வாதியின் நிலங்களுக்கு ரோட்டிலிருந்து வாதிக்கு பாத்தியப்பட்ட சர்வே எண் 293/3A, 293/3B நிலங்களின் வழியாக தாவா பொது கிணற்றிக்கு வந்து போவதையோ மேற்படி நிலத்தில்

T Anbu Digitally signed by T Anbu Date: 2026.07.24 18:41:58 +0530

பூமிக்கடியில் PVC குழாய் பதித்து நீர்பாசனம் செய்வதையோ இந்த பிரதிவாதிகள் ஒரு போதும் ஆட்சேபணை செய்யவில்லை. மாறாக இந்த பிரதிவாதிகளுக்கு இடைஞ்சல் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் வேண்டுமென்றே பிரதிவாதிகளின் நிலத்தில் தனது பணபலத்தாலும், ஆள்பலத்தாலும் அத்துமீறி நுழைந்து தொந்தரவு செய்ய வாதிக்கு சட்டப்படி எந்தவித ரைட்டும் இல்லை. அவ்வாறு வாதிக்கு உரிமை இருக்கும்பட்சத்தில் வாதியின் சகோதரர் ஆனந்தனும், மேற்படி வாதியின் தாவாவில் ஒரு பார்டியாக இருந்து வழக்கு தாக்கல் செய்திருப்பார். அவ்வாறு தங்களுக்கு எந்தவித ரைட்டும் இல்லாத காரணத்தால்தான் வாதியுடன் சேர்ந்து வழக்காடவில்லை.

13. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வரைபடம் தெளிவாகவும், விளக்கமாகவும் இல்லை. வாநியின் வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள A,B புள்ளிகள் ரோட்டில் இருந்து வாதியின் வீட்டுக்கும் செல்லும் தனிப்பட்ட பாதையாகும். A,B புள்ளி பாதையைத் தொடர்ந்து தாவா கிணற்றிக்கு வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது போல் எந்தபாதையும் பூஸ்துதியில் இல்லை. வாதியின் தாவா A,B தாவா 13–வது பத்தியில் சொல்லப்பட்டுள்ளதுபோல் வாதியும், வாதியின் சகோதரரும் தங்கள் நிலங்களில் இருந்து சர்வே 293/1A 293/1B நிலங்களுக்கு தென்புறத்தில் வரைபடத்தில் கண்ட A,B அடையாளமிட்ட 4 அடி அகலமுள்ள வரப்பின் மூலமாக பொதுக்கிணற்றை சென்றடைந்து வருவதாகவும், இதனை தவிர்த்து வாதியும் அவரது சகோதரரும் தங்களது வீடு மற்றும் நிலங்களில் இருந்து பொதுக்கிணற்றை அடைய வேறு பாதை வசதி கிடையாது என்றும், சொல்லிருப்பது உண்மையல்ல. அதனை பொறுத்து வாதி எந்த ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. வாதியின் வழக்கிற்கு வழக்குமூலம் இல்லை. அந்த வகையில் வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

14. வாதியின் வழக்குரை, பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை ஆகியவற்றினை ஆய்ந்து கீழ்க்கண்ட எழுவினாக்கள் தீர்வுக்காக வனையப்பட்டன.

1. வழக்குரையில் கோரப்பட்டுள்ளபடி சர்வே எண்.293/3 சி–லிருந்து தண்ணீரை எடுப்பதற்கு நிரந்தர உறுத்துக்கட்டளை உத்தரவு பெற வாதி உரிமை உள்ளவரா?

T Anbu

Digitally signed by T Anbu
Date: 2026.07.24 18:42:07 +0530

2. தாவாப்படி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பெற வாதி அருகரா?
3. வேறு என்ன பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது?

15. வழக்கு சூழ்நிலையினை பரிசீலனை செய்து, வழக்கு சூழ்நிலைக்கு ஏற்றவாறு, உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 14 விதி 5ன் கீழ் கீழ்க்கண்டவாறு எழுவினாக்கள் மாற்றியமைக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு வனையப்படுகிறது.

1. வழக்குரையில் கோரப்பட்டுள்ளபடி சர்வே எண்.293/3 சி– லிருந்து சர்வே எண்.293/1 பி நிலத்தில் பூமிக்கடியில் புதைக்கப்பட்ட குழாய் மூலமாக தண்ணீர் எடுத்துச்சென்று பாசனம் செய்துவர உரிமையுள்ளதா?
2. வாதி தனக்கு பாத்தியப்பட்ட தாவா நிலங்களில் இருந்து வழக்கு வரைபடத்தில் எ,பி புள்ளியில் உள்ள மேற்படி நிலத்தில் உள்ள 4 அடி வரப்பு வழியாக பொது கிணற்றை சென்றடைவதற்கு வாதி உரிமை படைத்தவரா?
3. தாவாப்படி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?
4. இதர பரிகாரம் என்ன?

16. வாதியின் தரப்பில் வாதி வா.சா.1 ஆகவும், பழனியாண்டி என்பவர் வா.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் 2ம் பிரதிவாதி பெரியண்ணன் பி.வா.சா.1 ஆக 01.09.2025ம் தேதியன்று விசாரிக்கப்பட்டு, எந்தவிதமான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படாத நிலையில் வாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக 09.09.2025ம் தேதியன்று வாய்தா போடப்பட்ட நிலையில், போதுமான வாய்ப்பளித்தும் பி.வா.சா.1 குறுக்கு விசாரணைக்கு ஆஜராகாததால் 10.03.2026ம் தேதியன்று பிரதிவாதிகள் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டார்கள். நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீ.ம.சா.1 ஆகவும், நீதிமன்ற ஆணையர் வரைபடம் நீ.ம.சா.2 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

17. மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றம், மதுரை கிளை CRP ( MD) No.1113 of 2026 and CMP ( MD ) No.5264 of 2026 Family Manager

T Anbu

Digitally signed by T Anbu
Date: 2026.07.24 18:42:16 +0530

A.Subramanian Vs. P.Kandasamy ( died and others என்ற வழக்கில் தவறுகை தரப்பினரால் சாட்சியம் முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தால் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 17 விதி 3ன் கீழ் சங்கதியின் தகுதிக்கு ஏற்றவாறு (Merit of the Case) வழக்கில் தீர்வு காணலாம் என சொல்லப்பட்டுள்ளது. இவ்வழக்கில் பிரதிவாதிகள் தோன்றாத்தரப்பினராக்கப்பட்ட போதிலும், பி.வா.சா.1 ஆக 2ம் பிரதிவாதி பெரியண்ணன் விசாரிக்கப்பட்டுள்ளார். எனவே, வழக்கு சங்கதிகளின் அடிப்படையில், உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 17 விதி 3ன் கீழ் சங்கதியின் தகுதிக்கு ஏற்றவாறு (Merit of the Case) தீர்வு காணப்படுகிறது.

18. வாதியின் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், தாவா சொத்துக்கள் துறையூர் வட்டம், வடக்குவெளி கிராமத்தில் உள்ளன. தாவா கிராம சர்வே 294/2–ல் ஏக்கர் 8.99 செண்டில் தகுந்த நான்கெல்லைகள் காட்டி வாதி ஏக்கர் 1.72 செண்ட் நிலத்தை 14.04.1988–ம் தேதி 1 முதல் 3 எதிர்வாதிகளிடம் கிரையம் பெற்றுள்ளார். கடந்த 08.01.1992 தேதி வாதியின் சகோதரர் ஆனந்தன் என்பவர் தாசபோயன் வகையறாவிடம் சர்வே 293/1–ல் ஏக்கர் 2.72 செண்டில் தகுந்த நான்கெல்லைகள் காட்டி ஏக்கர் 1.36 செண்டும், சர்வே எண்.294/2ல் ஏக்கர் 8.99 செண்டில் ஏக்கர் 0.17 செண்ட் நிலத்தினையும் கிரையம் பெற்றுள்ளார். ஆனந்தனுக்கு தாசபோயன் கிரையம் செய்தது போக எஞ்சிய சொத்து ஏக்கர் 1.36 செண்ட் மட்டுமே இருக்க, மேற்படி சர்வே நெம்பரில் 1 முதல் 3 பிரதிவாதிகள் ஏக்கர் 1.52 செண்ட் என தவறான பரப்பளவு காட்டி கிரையம் பெற்றுக் கொண்டு அதனை அனுசரித்து சர்வே 293/1A மற்றும் 293/1B என உட்பிரிவுகள் ஏற்பட்டுவிட்டன. கடந்த 15.10.2009–ம் தேதி வாதியும், வாதியின் சகோதரரும். 1ம் எதிர்வாதியும் சர்வே எண். 293/3A, 3B, 3C இவைகளைப் பொருத்து பரிவர்த்தனைப் பத்திரம் செய்து கொண்டதில் சர்வே 293/3C–ல் பொதுக்கிணறு மற்றும் கிணற்று மேட்டுக்கு ஏக்கர் 0.11 செண்ட் ஒதுக்கி அதற்கு வடபுறமுள்ள ஏக்கர் 0.30 செண்டில் அதாவது சர்வே 293/3A மற்றும் 293/3B–ல் கீழ்புறம் 0.15 செண்ட் வாதிக்கும். அவரது சகோதரருக்கும் அவைகளில் மேல்புறம் 0.15 செண்ட், 1ம் எதிர்வாதியின் குடும்பத்திற்கும் பரிவர்த்தனை ஆகியது.

19. 1 முதல் 3 எதிர்வாதிகள் குடும்பத்தில் பிரிவினை ஏற்பட்டதற்குப் பிறகு, வாதியும் அவரது சகோதரரும் 12.04.2010–ம் தேதி தங்களுக்குள்

T Anbu
Digitally signed by T Anbu
Date: 2026.07.24 18:42:25 +0530

ஏற்பட்ட வாய்கரார் பிரிவினையை அனுசரித்து ஆனந்தனுக்கு வாதி ஒரு கிரையப் பத்திரமும், வாதிக்கு ஆனந்தன் ஒரு கிரையப் பத்திரமும், 12.04.2010–ம் தேதி எழுதிக்கொண்டனர். அவ்வாறு ஆனந்தன் வாதிக்கு கிரையப் பத்திரம் எழுதிக் கொடுக்கும் பொழுது சர்வே 293/1–ல் ஏற்கனவே 1 முதல் 3 எதிர்வாதிகள் கிரையப் பத்திரம் எழுதிக்கொள்ளும் பொழுது சர்வே 293/1–ல் ஏக்கர் 2.72 செண்டில் ஏக்கர் 1.36 செண்ட் என கிரையம் பெறுவதற்கு பதிலாக ஏக்கர் 1.51 செண்ட் என கிரையப் பத்திரத்தை ஏற்படுத்திக் கொண்டு அதனை அனுசரித்து, 293/IB என உட்பிரிவு ஏற்பட்டுவிட்டதால், சர்வே 293/IB–ல் மேல்புறம் ஏக்கர் 0.05 செண்ட் நிலத்தினையும் வாதிக்கு கிரையம் செய்வதாக வேறு சொத்துக்களையும் சேர்த்து ஆனந்தனும், பெரியண்ணனும் சேர்ந்து வாதிக்கு கிரையப் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளனர். எனவே வாதிக்கும், அவரது சகோதரருக்கும் பிரிவினை ஏற்பட்டதற்குப் பிறகு, வாதிக்கு சர்வே 294/2B–ல் மேல்புறம் ஏக்கர் 0.08 1/2 செண்டும், சர்வே 294/1A–ல் கீழ்புறம் ஏக்கர் 0.66 1/2 செண்ட் நிலமும், சர்வே 293/1B–ல் மேல்புறம் ஏக்கர் 0.05 செண்ட் நிலமும் மற்றும் சர்வே 294/2C–ல் வாதி கிரையம் பெற்ற ஏக்கர் 1.72 செண்டில் ஆனந்தனுக்கும், பொதுப்பாதைக்கும் ஒதுக்கியது போக 0.6 3/4 செண்டும் சர்வே 293/3A–ல் கீழ்புறம் பாதியும், சர்வே 293/3C பொதுக்கிணற்றில் 4 பங்கும் பாத்தியப்பட்டுவிட்டது.

20. இதேபோல வாதியின் தம்பி ஆனந்தனுக்கு சர்வே 293/3C பொதுக்கிணற்றில் 4 பங்கும் 293/3B–ல், கீழ்புறம் பாதியும் சர்வே 293/1A–ல், மேல்புறம் ஏக்கர் 0.69 –32 செண்டும், சர்வே 294/2C–ல் மேல்புறம் 1.72 செண்டில் கீழ்புறம் தென்வடல் மற்றும் கிழமேல் வண்டிப்பாதைக்கு வாதியும், ஆனந்தனும் நிலம் ஒதுக்கிக் கொண்டது போக எஞ்சிய 0.89 3/4 நிலமும், சர்வே 294/2B –ல் கீழ்புறம் ஏக்கர் 0.08.1/2 செண்டும் பாத்தியப்பட்டுவிட்டன. தாவா 293/3C பொதுக்கிணற்றில் பாதி பாகமும், சர்வே 293/3A, 3B இவைகளில் மேல்புறம் பாதியும், சர்வே 293/1B–ல் கீழ்புறம் ஏக்கர் 1.46 செண்ட் நிலமும், சர்வே 294/2c–ல் ஆனந்தன் சொத்திற்கு கீழ்புறம் பகுதி நிலங்களும், சர்வே எண்.293/2ல் உள்ள நிலமும் 1 முதல் 3 எதிர்வாதிகள் குடும்பத்திற்குப் பாத்தியப்பட்டது. இந்த நிலங்களுக்கு பாசன ஆதாரமுள்ள கிணறு சர்வே எண்.293/3C–ல் உள்ள கிணறாகும். இந்த கிணற்றிலிருந்து வாதி மற்றும் அவரது சகோதர் ஆனந்தன் நிலங்களுக்கு சர்வே எண்.293/1B ல் சுமார் 20

T Anbu
Digitally signed by T Anbu
Date: 2026.07.24 18:42:33 +0530

வருடங்களுக்கு முன்பு, பதிக்கப்பட்ட PVC குழாய் மூலம் தண்ணீர் பாசனம் நடைபெறுகின்றது. பொது கிணற்றில் ஏற்கனவே இருந்த ஒரு பொது மின் இணைப்பு இருக்க மற்றும் ஒரு இணைப்பு பெறப்பட்டு, தற்போது பொது கிணற்றில் இரண்டு மின் இணைப்புகளும், இரண்டு மின் மோட்டார்களும் உள்ளன. இரண்டு மின் இணைப்புகளில் தற்போது மின் இணைப்பு எண்.14 வாதிக்கும். அவரது சகோதரருக்குப் பாத்தியப்பட்டது. 1 முதல் 3 எதிர்வாதிகள் மின் இணைப்பு எண்.101 ஆகும். இதை தவிர்த்து பொதுக்கிணற்றிலிருந்து வாதியின் நிலங்களுக்கு தண்ணீர் பாசனம் செய்ய வேறு பாசன வசதி ஏதும் கிடையாது.

21. வாதியும், வாதியின் சகோதரர்களும் தங்களது நிலங்களிலிருந்து சர்வே 293/1A மற்றும் IB–க்கு தென்புறமுள்ள வழக்கு வரைபடத்தில் கண்ட A, B அடையாளமிட்ட 4 அடி அகலமுள்ள வரப்பின் மூலமாக பொதுக்கிணற்றை சென்றடைந்து வருகின்றனர். இதனை தவிர்த்து வாதியும், வாதியின் சகோதரரும் தங்களது வீடு மற்றும் நிலங்களிலிருந்து பொதுக்கிணறை அடைய வேறு பாதை வசதி ஏதும் கிடையாது. சர்வே 293/3C ல் உள்ள கிணறு பொதுக்கிணறு என்பதாலும், மேற்படி பொதுக்கிணறுக்கு சம்மந்தப்பட்ட ஆயக்கட்டு நிலங்கள் வாதிக்கும் அவரது சகோதரருக்கும் மற்றும் 1 முதல் 3 எதிர்வாதிகளுக்குமிடையே பாத்தியம் ஏற்பட்டுவிட்டபடியாலும், வழக்கு வரைபடத்தில் கண்ட A, B வரப்பின் மூலமாகவும் பொதுக் கிணற்றை அடைய தடநடைபாதையாக புழக்கம் செய்ய அத்தியாவசிய புழக்க உரிமைப்படிக்கும் இயற்கை விதிநெறி செய்ய முறைகளின் படிக்கும் வாதிக்கும், வாதியின் சகோதரர்களுக்கும் உரிமை உள்ளது. இதனை மறுக்க 1 முதல் 3 எதிர்வாதிகளுக்கு எவ்விதத்திலும் உரிமையில்லை.

22. வாதியின் மேற்படி பழக்க உரிமையை மறுப்பதற்கு 1 முதல் 3 எதிர்வாதிகள் முரண்தடை தோஷத்தாலும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். மேற்படி வரைபடத்தில் கண்ட A, B புள்ளிகளுக்கு வடக்கே உள்ள நிலம் பள்ளமான நிலங்களாகும். A, B புள்ளிகளுக்கு தெற்கே உள்ள நிலம் மேட்டு நிலமாகும். மேட்டு நிலத்திலுள்ள A, B வரப்பின் மூலமாகவே பொதுக்கிணற்றை வாதியும் ஆனந்தனும் சென்றடைய முடியுமே தவிர வேறுவழியில்லை. 4 முதல் 7 எதிர்வாதிகளுக்கு 1 முதல் 3 எதிர்வாதிகள் தங்களது நிலங்களை பாத்தியப்படுத்தியுள்ளதாகக் கூறிக்கொண்டு கடந்த 15.11.2011–ம் தேதி முதல் வாதி பொதுக்

T Anbu
Digitally signed by T Anbu
Date: 2026.07.24 18:42:39 +0530

கிணற்றிலிருந்து சர்வே 293/1B–ன் பூமிக்கடியில் புதைக்கப்பட்டுள்ள PVC குழாய் மூலம் வாதி தனது நிலங்களை பாசனம் செய்வதை குழாயை சேதப்படுத்தியது மூலமும், வாதி தனது நிலங்களிலிருந்து வழக்கு வரைபடத்தில் கண்ட A,B புள்ளிகளின் வழியாக பொதுக் கிணற்றை அடைந்து வருவதையும் தடுத்துக் கொண்டு வருகின்றனர். கடந்த 15.11.2011–ம் தேதி மேற்படி பாசனக் குழாயை எதிர்வாதிகள் சேதம் விளைவித்ததால் வாதி காவல் நிலையத்தில் புகார் கொடுக்க நேர்ந்தது. காவல் நிலையத்தினர் பூசலுக்கு முன்பு எவ்வாறு தரப்பாளர்கள் அனுபோகம் செய்தார்களோ அவ்வண்ணமே அனுபோகம் செய்ய வேண்டுமென அறுவுறுத்தினர். இருப்பினும் சீர்செய்யப்பட்ட குழாயை மீண்டும் உடைக்கவும், நடைபாதையில் முள்கிளைகளை போடவும் வாதிக்கு இடையூறு கொடுக்கவும், பிரதிவாதிகள் முயன்று வருகின்றனர். எனவே தாவாப்படிநிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கவேண்டும் என வாதிட்டார்.

23. <u>**எழுவினா.1**</u>

வாதியின் வழக்குரையில் கோரப்பட்டுள்ளபடி வாதிக்கு சர்வே எண்.293/3 சி– லிருந்து சர்வே எண்.293/1 பி நிலத்தில் பூமிக்கடியில் புதைக்கப்பட்ட குழாய் மூலமாக தண்ணீர் எடுத்துச்சென்று பாசனம் செய்துவர உரிமையுள்ளதா ? என்பதைப்பற்றி பரிசீலிக்கையில்:–

பி.வா.சா.1 09.09.2025 அன்று குறுக்கு விசாரணையில், தாவாவிற்கு சம்மந்தப்பட்ட கிணறு, பொது கிணறு என்று சொன்னால் சரிதான், வா.சா.ஆ.1 மாதிரி வரைபடத்தில் சர்வே எண்.293/3 சி–ல் தான் தாவா பொது கிணறு உள்ளது என்றால், சாட்சி வா.சா.ஆ.1 ஆவணத்தினைப் பார்த்துவிட்டு சரி என்றும், இந்த தாவா பொது கிணற்றில் பாதி பாகம் தங்கராசுக்கும், அவரது சகோதரர் ஆனந்தனுக்கும் பாத்தியப்பட்டது என்றால் சரிதான், மீதி பாதி எனக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான் என்றும், மீண்டும் 04.03.2026 ம் தேதி குறுக்கு விசாரணையில் சர்வே எண்.293/3 சி– நிலத்தில் கிணறு உள்ளது என்றால் சரி. அது பொது கிணறு என ஒப்புக்கொண்டுள்ளார். எனவே, வாதி வழக்குரையில் கூறியவாறு சர்வே எண்.293/3 சி–ல் உள்ள கிணறு பொது கிணறு என வா.சா.1 ஒப்புக்கொண்டுள்ளார்.

24. இவ்வெழுவினாவின் மற்றொரு பகுதியான சர்வே எண்.293/1 பி நிலத்தில் பூமிக்கடியில் புதைக்கப்பட்ட குழாய் மூலம் தண்ணீர்

T Anbu
Digitally signed by T Anbu
Date: 2026.07.24 18:42:46 +0530

எடுத்துச்செல்ல உரிமையுள்ளதா? அவ்வாறு பாசனம் செய்து வருகிறாரா? என்பதை பரிசீலிக்கையில், வா.சா.1 தன்னுடைய சாட்சியத்தில், சர்வே எண்.293/1பி–ல் மேல்புறம் ஏக்கர் 0.05 செண்ட் நிலம் வா.சா.ஆ.5 ஆவணம் மூலம் வாதிக்கு பாத்தியப்பட்டதாக சாட்சியமளித்துள்ளார். வா.சா.ஆ.5 ஆவணத்தில் 3வது அயிட்ட சொத்தாக காட்டப்பட்டுள்ளது. இந்த ஆவணத்தினை எழுதிக்கொடுத்தவர் பி.வா.சா.1 பெரியண்ணன் மற்றும் வாதியின் சகோதரரான கே.ஆனந்தன் ஆவார்.

25. வா.சா.1 தாக்கல் செய்த முதல் நிரூபண வாக்குமூலத்தில் சர்வே எண்.293/1பி–ல் கீழ்புறம் ஏக்கர் 1.46 செண்ட் நிலம் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என ஒப்புக்கொண்டுள்ளார். 03.11.2025ம் தேதியன்று பி.வா.சா.1 குறுக்கு விசாரணையில் பக்கம் 7 4வது வரியில் சர்வே எண்.293/1பி என்னுடைய நிலம் என்று சொன்னால் சரிதான் என பி.வா.சா.1 சாட்சியமளித்துள்ளார். எனவே, சர்வே எண்.293/1பி நிலம் என்பது பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது எனவும், ஆனால் இந்த சர்வே எண்ணில் வா.சா.ஆ.5 ஆவணத்தின்படி மேல்புறம் 0.05 செண்ட் நிலம் மட்டுமே வாதிக்கு பாத்தியப்பட்டதாக காணப்படுகிறது. வாதி இவ்வழக்கில் சர்வே எண்.293/1பி–ல் சுமார் 20 வருடங்களுக்கு முன்பு பதிக்கப்பட்ட பி.வி.சி குழாய் மூலம் தண்ணீர் பாசனம் நடைபெறுகின்றது. அதனை தடை செய்யக்கூடாது என்பதுதான் வாதியின் வழக்கு.

26. பி.வா.சா.1 பெரியண்ணன் தாக்கல் செய்த முதல் நிரூபண வாக்குமூலம் பத்தி 2ல், இந்த சர்வே எண்.293/1பி நிலத்தில் பூமிக்கு அடியில் 20 வருடங்களுக்கு முன்னால் பி.வி.சி குழாய் மூலம் தண்ணீர் பாசனம் செய்து விவசாயம் செய்து வந்ததாக சொல்வது சரியல்ல. மேற்படி குழாய் நானும் மற்ற பிரதிவாதிகளும் மேட்டுப்பகுதி நிலங்களுக்கு நீர் பாசனம் செய்ய நிறுவப்பட்ட பைன் லைன் ஆகும் என சாட்சியமளித்துள்ளார். இந்த அம்சத்தினைப் பொருத்து வாதியின் தரப்பில் பி.வா.சா.1ஐ அதாவது பி.வி.சி பைன் லைனை யார் பதித்தார்கள் என்றோ அல்லது வாதியின் வழக்குப்படி வாதிதான் பதித்தார் என்றோ நீதிமன்றத்திற்கு விளக்கும் பொருட்டு குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. மாறாக, இதே சர்வே எண்ணில் நிலம் ஏற்றத்தாழ்வு இருப்பதாக வாதி கூறியதால் என்னுடைய 0.05 செண்ட் நிலத்தினை வாதிக்கு எழுதிக்கொடுத்துள்ளதாக பதில் அளித்துள்ளார்.

T Anbu
Digitally signed by T Anbu
Date: 2026.07.24 18:42:54 +0530

27. சாட்சிய சட்டம் பிரிவு 102ன் கீழ் வாதி கூறியபடி சர்வே எண்.293/1பி-ல் வாதி பி.வி.சி பைப் பதித்தார் என்றோ அல்லது அதில் உள்ள குழாய் மூலம் தண்ணீர் எடுத்து பாசனம் செய்தார் என்பது வாதியின் நிரூபண சுமையாகும். வா.சா.1 குறுக்கு விசாரணையில் சர்வே எண்.293/1பி-ல் நான் பைப் லைனை அமைத்திருந்தால் அதனை பறித்து நீதிமன்ற வழக்கறிஞர் ஆணையரிடம் காண்பித்திருப்பேன் என்று சொன்னால், நீதிமன்ற வழக்கறிஞர் ஆணையயரிடம் சர்வே எண்.293/1பி-ல் அமைந்துள்ள பைப் லைனை பறித்து காண்பித்தேன் என 26.06.2026ம் தேதியிட்ட குறுக்கு விசாரணையில் சாட்சியமளித்துள்ளார். நீ.ம.சா.ஆ.1 வழக்கறிஞர் ஆணையர் அறிக்கை பத்தி 9ல் 5வது வரியில் பூமிக்குள் உள்ள பி.வி.சி பைப்பை வழக்கறிஞர் ஆணையரிடம் பறித்து காண்பித்தபோது, பிரதிவாதி வழக்கறிஞர் மேற்படி ஆணையர் உத்தரவில் பி.வி.சி குழாய் உள்ளதை பறித்து காண்பிக்க ஆணையர் உத்தரவில் குறிப்பிட்டு எந்த உத்தரவும் இல்லை என கூறினார் என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் வா.சா.1 குறுக்கு விசாரணையில் பைப் லைனை பறித்து காண்பித்தேன் என நீ.ம.சா..1 அறிக்கைக்கு முரணாக சாட்சியமளித்துள்ளார்.

28. மேலும், வாதி சர்வே எண்.293/1பி-ல் அமைந்துள்ள பி.வி.சி பைன் லைன் வாதியால் அமைக்கப்பட்டதாகவோ, அல்லது அவ்வாறு அமைத்திருந்த பி.வி.சி லைனை வாதி சர்வே எண்.293/3சி பொது கிணற்றில் இருந்து தண்ணீர் எடுத்துச்சென்றிருந்தார் என்பதை வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். ஆனால் வா.சா.1 முதல் நிரூபண வாக்குமூலத்தில் 20 வருடங்களுக்கு முன்பு பதிக்கப்பட்ட பி.வி.சி குழாய் என தெரிவித்துள்ளார். ஆனால் அந்த பி.வி.சி பைப் லைன் தன்னால் அமைக்கப்பட்டதாக பி.வா.சா.1 முதல் நிரூபண வாக்குமூலத்தில் மறுத்து சாட்சியமளித்துள்ளார். எனவே, அந்த பி.வி.சி பைப் யாருடைய இடத்தில் அமைக்கப்பட்டது என்பதைப் பொருத்து அந்த இடத்தின் சொந்தக்காரர் அந்த பைப்பினை அமைத்திருக்கலாம் என அனுமானம் கொள்ளவேண்டியுள்ளது. இந்நிலையில் நீ.ம.சா.ஆ.1 நீதிமன்ற வழக்கறிஞர் ஆணையர் அறிக்கை பத்தி 4ல், 10வது வரியில் பி.வி.சி பைப் பிரதிவாதியின் வயலில் பதிக்கப்பட்டு வாதியின் நிலத்தில் உள்ள தொட்டியில் 3 அடி உயரத்தில் பி.வி.சி பைப் நிறுத்தப்பட்டு மேற்படி தொட்டியில் தண்ணீர் விழும் வண்ணம் இருந்தது என குறிப்பிட்டுள்ளார். எனவே, வாதி உரிமை கோரும் பி.வி.சி லைன்

T Anbu
Digitally signed by T Anbu
Date: 2026.07.24 18:43:01 +0530

பிரதிவாதிகள் நிலத்தில் இருப்பதால், அந்த பி.வி.சி பைப்பை பிரதிவாதிகள் நிலத்தில் வாதியால் நிறுவப்பட்டது என்றும், அதன் வழியாக வாதி கடந்த 20 வருடங்களாக தண்ணீர் பாய்ச்சினார் என்றும் வாதியின் தரப்பில் வெளிப்படையான சாட்சியம் இல்லை. ஆனால் பிரதிவாதிகள் அந்த பி.வி.சி லைன் தங்களால் பதிக்கப்பட்டதாக முதல் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியிருப்பதை அவ்வளவு எளிதில் புறந்தள்ள முடியாது.

29. மேலும் நீ.ம.சா.ஆ.1 அறிக்கையில் பி.வி.சி பைப் லைன் அதனை தொடர்ந்து சிமெண்ட் தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் இவைகள் அனைத்தும் வாதி கூறியவாறு வாதியால் அமைக்கப்பட்டு கடந்த 20 ஆண்டுகளாக தனது பயன்பாட்டில் உள்ளதாக அறுதியிட்ட சாட்சிகள் முன்னிலைப்படுத்தப்படவில்லை. நீ.ம.சா.ஆ.1 அறிக்கையில் தாவா இடத்தை பார்வையிட்டபோது என அறிக்கையில் ஆரம்பித்து தெரிவித்துள்ளார். வழக்குரைப்படி தாவாச்சொத்து சர்வே எண்.294/2 பி, 294/2 சி, 294/1 எ, 293/1 பி, 293/3 எ, என ஐந்து எண்களை உள்ளடக்கியது. வழக்கறிஞர் பார்வையிட்ட பி.வி.சி பைப் பிரதிவாதிகளின் வயலில் பதிக்கப்பட்டு, வாதியின் நிலத்தில் உள்ள தொட்டியில் 3 அடி உயரத்தில் பி.வி.சி லைன் நிறுத்தப்பட்டுள்ளது. எனவே, பிரதிவாதிகளின் இடத்தில் அமைக்கப்பட்டுள்ள பி.வி.சி பைப் லைனை வாதி கூறியபடி நீர் பாசனம் செய்ய உரிமை படைத்தார் என்பதை வாதி எந்தவிதமான சாட்சியமும், சான்றாவணங்களும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. ஆனால், வாதியின் வயலில் பி.வி.சி பைப் லைன், சிமெண்ட் தொட்டி போன்ற அமைப்புகள் உள்ளன. இந்த பி.வி.சி பைப், சிமெண்ட் தொட்டி ஆகியவைகள் வாதி கூறியபடி, பிரதிவாதிகளின் நிலத்தில் பதிக்கப்பட்டுள்ள பி.வி.சி லைன் வழியாக நீர் பாய்ச்சி எடுத்துச்சென்று அனுபவம் செய்து வந்ததாகவும், அதற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய சாட்சியங்களை வாதி முன்னிலைப்படுத்தி இருக்கவேண்டும்.

30. வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்ட பழனியாண்டி என்ற தாவா கிராமத்தினை சேர்ந்த நபர் தன் குறுக்கு விசாரணையில் ஆனந்தன் மற்றும் வாதி தங்கராசு போர் போட்ட பிறகு, பாதையாக சொல்லப்படும் இடத்தில் தண்ணீர் போட்டுக்கொள்ள தொட்டி அமைத்தார் என்றால் சரியல்ல என சாட்சியமளித்துள்ளார். மேலும், வா.சா.2 முதல் நிரூபண வாக்குமூலம் பத்தி 3 ல், பொது கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்து

T Anbu

Digitally signed by T Anbu
Date: 2026.07.24 18:43:08 +0530

பூமிக்கு அடியில் பதிக்கப்பட்டுள்ள குழாய் மூலமாக தன்னுடைய நிலங்களை சாகுபடி செய்து வருகின்றார் என சாட்சியமளித்துள்ளார். ஆனால் வாதியின் வழக்குபடி சர்வே எண்.293/1பி–ல் வாதியால் அமைக்கப்பட்ட அல்லது அமைந்திருந்த குழாய் வழியாகத்தான் நீர் பாய்ச்சினார் என வாதியின் வழக்கை அனுசரித்து சாட்சியமளிக்கவில்லை.

31. வா.சா.1 தனது முதன்மை நிரூபண வாக்குமூலத்தில் சர்வே எண்.293/1பி–ல் சுமார் 20 வருடங்களுக்கு முன்பு பதிக்கப்பட்ட பி.வி.சி குழாய் மூலம் தண்ணீர் பாசனம் நடைபெற்று வருகின்றது என குறிப்பிட்டுள்ளார். அவ்வாறு அமைக்கப்பட்ட பி.வி.சி லைன் தன்னால் அமைக்கப்பட்டதாக பிரதிவாதி முதல் நிரூபண வாக்குமூலத்தில் மறுத்துள்ளதால், அவ்வாறு வாதி கூறியவாறு 20 ஆண்டுகாலமாக அந்த பி.வி.சி பைப் மூலம் நீர் பாய்ச்சி வருவதாக வாதி நிரூபிக்க கடமைப்பட்டவர். பி.வி.சி பைப் லைன் உள்ள இடம் பிரதிவாதியின் இடமாக காணப்படுகிறது. சுருக்கமாக வாதி கூறிய பி.வி.சி லைன் பிரதிவாதியின் இடத்தில் இருந்தாலும், வாதிக்கு உரிமையுள்ளது என்பதை பி.வி.சி லைன் தான் அமைத்ததாகவோ அல்லது எவ்வாறு பிரதிவாதியின் நிலத்தில் உள்ள பி.வி.சி லைனை வாதி பயன்படுத்தினார் என்று தனக்குள்ள உரிமையினை வாதி நிரூபிக்கவில்லை. எனவே, வாதி கூறியபடி சர்வே எண்.293/3சி பொது கிணற்றில் இருந்து வாதி தண்ணீர் எடுக்க உரிமை இருந்த போதிலும் சர்வே எண்.293/1பி–ல் பிரதிவாதியின் நிலத்தில் அமைந்துள்ள பைப் லைனில் தனக்குள்ள உரிமையினை வாதி நிரூபிக்காததால், வழக்குரையில் கோரப்பட்டுள்ளபடி சர்வே எண்.293/3சி– லிருந்து சர்வே எண்.293/1பி நிலத்தில் பூமிக்கடியில் புதைக்கப்பட்ட குழாய் மூலமாக தண்ணீர் எடுத்துச்சென்று பாசனம் செய்துவர உரிமையில்லை என வாதிக்கு எதிராக இவ்வழக்கெழுவினாவிற்கு தீர்வு காணப்படுகிறது.

32. <u>**எழுவினா 2**</u>

**வாதி தனக்கு பாத்தியப்பட்ட தாவா நிலங்களில் இருந்து வழக்கு வரைபடத்தில் எ,பி புள்ளியில் உள்ள மேற்படி நிலத்தில் உள்ள 4 அடி வரப்பு வழியாக பொது கிணற்றை சென்றடைவதற்கு வாதி உரிமை படைத்தவரா? என்பதைப்பற்றி பரிசீலிக்கையில்**:–

வா.சா.1 முதல் நிரூபண வாக்குமூலத்தில், சர்வே எண்.293/1எ

T Anbu
Digitally signed by T Anbu
Date: 2026.07.24 18:43:15 +0530

மற்றும் 193/1பி–க்கு தென்புறம் உள்ள வழக்கு வரைபடத்தில் கண்ட எ,பி அடையாளம் இட்ட 4 அடி அகலம் உள்ள வரப்பின் மூலமாக பொது கிணற்றை சென்றடைந்து வருகிறோம் என சாட்சியமளித்துள்ளார். நீ.ம.சா.ஆ.1 ஆணையர் அறிக்கையில் சி,டி பாதையானது 5 அடி அகலம் உள்ள பாதை. வாதி வயல் அடையும் வரை மட்டுமே 5 அடி காணப்பட்டது. மேற்படி பாதையில் வடபுறம் 30 தென்னை மரங்கள், மற்றும் தென்புரம் 30 தென்னை மரங்கள் காணப்பட்டது. மேற்படி பாதை பிரதிவாதியின் வயலை அடையும்போது சுமார் 1 ½ அடி உயரமாகவும், ¼ அடி அகலமாகவும் உள்ள சிறிய பாதையாகவும் காணப்பட்டது என குறிப்பிட்டுள்ளார். ஆனால், பி.வா.சா.1 தாக்கல் செய்த முதல் நிரூபிண வாக்குமூலத்தில் 4 அடி அகலம் உள்ள வரப்பு என்பது பெருத்த பொய்யும், மோசடியும் ஆகும். பூஸ்துதியில் அதுபோன்று இல்லை ½ அடி கண்டுள்ள வரப்பு 3 அடி அகலம் உள்ள வாய்க்கால் மட்டுமே உள்ளது. அந்த வாய்க்கால் மையப்பகுதியில் 7,8 தென்னை மரங்கள் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார். வாதி கூறியபடி 4 அடி அகலம் அல்ல. மாறாக ½ அடி வரப்பு, 3 அடி வாய்க்கால் என தெரிவித்துள்ளார். நீ.ம.சா.ஆ.1 அறிக்கையில், வாதியின் வயல் அருகே 5 அடி அகலமாகவும், பிறகு பிரதிவாதியின் வயலை அடையும்போது, ¼ அடி அகலம் உள்ள சிறிய நடை பாதையாக உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

33. பி.வா.சா.1 04.03.2026ம் தேதியிட்ட குறுக்கு விசாரணையில், பள்ள வயலுக்கும், மேட்டு வயலுக்கும் கரை இல்லை. வரப்பு மட்டுமே உள்ளது. அந்த வரப்பு வழியாகத்தான் நிலத்துக்காரர்கள் நடப்பார்கள் என்றால் சரிதான். வாதி கிழமேல் வரப்பு வழியாக செல்வதை நான் இடையூறு செய்ததால்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் நான் அவ்வாறு இடையூறு செய்யவில்லை என சாட்சியமளித்துள்ளார். ஆனால் முதல் நிரூபண வாக்குமூலத்தில் எ,பி புள்ளி பாதையை தொடர்ந்து தாவா கிணற்றிற்கு வழக்குரையில் சொல்லப்பட்டது போல் எந்த பாதையும் பூஸ்துதியில் இல்லை என குறிப்பிட்டுள்ளார். ஆனால் குறுக்கு விசாரணையில் சர்வே எண்.293/1ல் 1 ஏக்கர் 51 செண்டில் 0.05 செண்ட் கிரையம் செய்த சொத்திற்கு தென்புறத்தில் ஆனந்திற்கும், தங்கராசுக்கும் வண்டிப்பாதை பாத்தியம் உண்டா என்றால் இல்லை, ஆனால் நான் சொல்வது போன்று இல்லாத ஒரு வண்டிபபாதையினை வா.சா.ஆ.5 கிரைய ஆவணத்தில் நான்கெல்லையாக காண்பித்து நான் எழுதிக்கொடுத்திருக்கிறேன்

T Anbu
Digitally signed by T Anbu
Date: 2026.07.24 18:43:22 +0530

என்று சொன்னால், அவ்வாறு நான் எழுதிக்கொடுக்கவில்லை என சாட்சியமளித்துள்ளார். ஆனால் வா.சா.ஆ.5 கிரைய ஆவணத்தினை பரிசீலிக்கையில் வாதி தங்கராசுக்கு, பெரியண்ணன் மற்றும் வாதியின் சகோதரர் ஆனந்தன் ஆகிய இருவரும் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தில், அயன் புஞ்சை சர்வே எண்.293/1பி–ல் நான்கெல்லை விவரத்தில், எங்கள் 1ம் நபர் ஆனந்தன் அவர்களுக்கும், கிரையம் பெறும் தங்கராசு ஆகிய தங்களுக்கும் சொந்தமான பொது வண்டிப்பாதைக்கும் வடக்கு என குறிப்பிடப்பட்டுள்ளது.

34. மேலும் கற்றறிந்த வாதி வழக்கறிஞர் பி.வா.சா.1 குறுக்கு விசாரணையில் வா.சா.ஆ.5 ஆவணத்தில் காட்டப்பட்டுள்ள வண்டிப்பாதைதான் இவ்வழக்கு சம்மந்தப்பட்ட கரை என்று சொல்லி வாதிட்டார். குறுக்கு விசாரணை செய்து, பி.வா.சா.1 தான் எழுதிக்கொடுத்த வா.சா.ஆ.5 ஆவணத்திற்கு முரணாக சாட்சியமளிக்க முடியாது. மேலும் உபய வாதிகள் நிலமானது தொடர்ந்து ஒன்றன் பின் ஒன்றாக உள்ளதாலும், உபய வாதிகளுக்கான பொது கிணறு உபய வாதிகளின் பயன்பாட்டில் உள்ளது. இந்நிலையில், இந்த பி.வா.சா.1 தாக்கல் செய்த முதல் நிரூபிண வாக்குமூலத்தில் இவ்வாறு பாதையாக வாதி பயன்படுத்துவதால், அசௌகரியம் ஏற்படுவதாக தெரிவித்துள்ளார்கள். ஆனால், தாவா பொது கிணற்றிற்கு வடபுறம் உள்ள சர்வே எண்.293/3எ மற்றும் 3பி ஆகியவற்றின் வழியே வாதி வரைபடத்தில் கண்டவாறு வேறு பாதையை பாதையாக பயன்படுத்திதான் அனுபவம் செய்து வருகிறார்கள் என குறிப்பிட்டுள்ளார்.

35. வா.சா.ஆ.5 ஆவணத்தில் பொது தடநடை பாதை என காட்டப்பட்டுள்ளதாலும், நீ.ம.சா.ஆ.1 அறிக்கையில் சிறிய தடநடை பாதையாக ¼ அடி அகலம் உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளதாலும், பொது கிணறு என்பதாலும், வாதி கூறியபடி எ,பி புள்ளி வழியாக வாதி, பிரதிவாதிகளின் மற்ற உரிமைக்கு பாதிப்பு ஏற்படுத்தாத வண்ணம் பாதையாக பயன்படுத்த இயற்கையாகவே உரிமை உண்டு என இந்த எழுவினாவிற்கு வாதிக்கு ஆதரவாக தீர்வு காணப்படுகிறது.

36. **<u>எழுவினா 3</u>**

**தாவாப்படி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா? என்பதைப்பற்றி பரிசீலிக்கையில்:–**

T Anbu
Digitally signed by T Anbu
Date: 2026.07.24 18:43:29 +0530

எழுவினா 1ற்கு தீர்வு கண்டவகையில், சர்வே எண்.293/1பி–ல் அமைந்துள்ள பி.வி.சி லைன் மூலம் வாதி நீர் எடுத்துச்செல்லும் உரிமை இல்லை என்பதால், இந்த பி.வி.சி பைப் லைன் மூலம் வாதி நீர் எடுத்துச்செல்வதை பிரதிவாதிகள் இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல. எழுவினா 2ற்கு தீர்வு கண்டவகையில், வாதி மாதிரி வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எ,பி, புள்ளி வழியாக பிரதிவாதிகளுக்கு எந்தவிதத்திலும் அசௌகர்யம் ஏற்படுத்தாவண்ணம் பொது கிணற்றை அடைய பாதையாக மட்டும் பயன்படுத்தஉரிமை உண்டு என்பதால், பிரதிவாதிகளின் இடையூறு இன்றி அந்த பாதையை வாதி அனுபவிக்க பிரதிவாதிகள் இடையூறு செய்ய முடியாது. இந்நிலையில், வா.சா.1 தன்னுடைய முதன்மை நிரூபண வாக்குமூலத்தில் 15.11.2011 முதல் பொது கிணற்றினைஅடைந்து வருவதையும் தடுத்து வருவதாக தெரிவித்துள்ளார். வாதியின் உரிமையினை பிரதிவாதிகள் தடுத்து வருவதால் அதனை பாதுகாத்துக்கொள்ள வாதிக்கு உரிமை உண்டு. எனவே, வாதியின் இந்த பாதை உரிமையினை பிரதிவாதிகள் இடையூறு செய்ய உரிமையில்லை எனவும், பாதை பாத்தியத்தினை பொருத்தளவில் வாதிக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கது என எனவும் இந்த எழுவினாவிற்கு வாதிக்கு ஆதரவாக தீர்வு காணப்படுகிறது.

37. **<u>எழுவினா 4</u>**

**வாதிக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரம் என்ன? என்பதைப்பற்றி பரிசீலிக்கையில்**:–

எழுவினா 1ற்கு வாதிக்கு எதிராகவும், 2ற்கு வாதிக்கு ஆதரவாகவும், எழுவினா 3ற்கு வாதிக்கு ஆதரவாக பகுதியாகவும் தீர்வு கண்டுள்ளதால், வேறு எந்த பரிகாரமும் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என இந்த எழுவினாவிற்கு தீர்வு காணப்படுகிறது.

இறுதியாக வாதியின் வழக்கு பகுதியாக அனுமதித்து,

அ பரிகாரமான வாதி தனக்கு பாத்தியப்பட்ட தாவா நிலங்களுக்கு தாவா பொது கிணறான சர்வே எண்.293/3சி–லிருந்து சர்வே எண்.293/1பி நிலத்தில் பூமிக்கடியில் புதைக்கப்பட்டுள்ள குழாய் மூலமாக தண்ணீர் எடுத்து சென்று பாசனம் செய்து கொண்டு வருவதை பிரதிவாதிகளோ அவர்களது ஆட்களோ, எவ்வகையிலும் இடையூறு செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம்

T Anbu
Digitally signed by T Anbu
Date: 2026.07.24 18:43:37 +0530

வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும்,

மற்றொரு ஆ பரிகாரமான வாதி தனக்கு பாத்தியப்பட்ட தாவா நிலங்களிலிருந்து வழக்கு வரைபடத்தில் கண்ட எ,பி புள்ளிகளில் உள்ள மேட்டு நிலத்திலுள்ள 4 அடி வரப்பு வழியாக வாதிக்கு எந்தவிதமான கூடுதல் அசௌகரியம் ஏற்படுத்தாமல் பொதுக்கிணற்றை சென்றடைய பாதையாக பயன்படுத்துவதை பிரதிவாதிகளோ அவர்களது ஆட்களோ எவ்வகையிலும் இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு வழங்கியும் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

செலவுத்தொகை இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தாளருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் படித்துப்பார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு ஜுலை திங்கள் 24ம் நாளான இன்று இந்நீதிமன்றத்தின் முன் அவையறிய பகரப்பட்டது.

T Anbu
Digitally signed by T Anbu
Date: 2026.07.24 18:43:46 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
துறையூர்.

**வாதி தரப்பு சாட்சிகள்**

வா.சா.1 தங்கராசு

வா.சா.2 பழனியாண்டி

**வாதி தரப்பு சான்றாவணங்கள்**

| **ஆவண எண்.** | **தேதி** | **ஆவணம்** | **ஆவணத்தின் தன்மை** |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | – | புல வரைபடம் | அசல் |
| வா.சா.ஆ.2 | 14.04.1988 | தங்கராசு அவர்களுக்கு, காளங்கி அம்மாள் வகையறா எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் | அசல் |
| வா.சா.ஆ.3 | 08.01.1992 | ஆனந்தன் அவர்களுக்கு, தாச போயன் வகையறா | சான்றிட்ட நகல் |

T Anbu
Digitally signed by T Anbu
Date: 2026.07.24 18:43:53 +0530

| | | | |
|---|---|---|---|
| | | எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் | |
| வா.சா.ஆ.4 | 15.10.2009 | தங்கராசு வகையறா சேர்ந்து எழுதிக்கொண்ட பரிவர்த்தனை பத்திரம் | அசல் |
| வா.சா.ஆ.5 | 12.04.2010 | ஆனந்தன் வகையறா சேர்ந்து தங்கராசுக்கு எழுதிக்கொடுத்த சுத்தக்கிரையப்பத்திரம் | அசல் |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்**

பி.வா.சா.1 பெரியண்ணன்

**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்**

இல்லை.

**நீதிமன்ற சான்றாவணங்கள்**

நீ.ம.சா.ஆ.1 ஆணையர் அறிக்கை

நீ.ம.சா.ஆ.2 ஆணையர் வரைபடம்.

T Anbu

Digitally signed by T Anbu
Date: 2026.07.24 18:44:01 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
துறையூர்.

Visit **ecourts.gov.in** for updates or download mobile app “**eCourts Services**” from Android or iOS